**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**MCOP No.24/2023** **தேதி: 08.08.2025**

**எ.ம.சா.1 – சிவக்குமார்**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

விபத்தின் போது நான் ஓட்டி வந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக வாகனம் TN 58 N 2307 என்றால் சரிதான். நான் மோதிய வாகனத்தின் பதிவெண் TN 67 BK 1954 TATA ACE என்றால் சரிதான். மேற்படி இரண்டு வாகனங்களும் மோதி ஏற்பட்ட விபத்தில் என்னுடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று ஆண்டிப்பட்டி காவல் ஆய்வாளர் என் மீது வழக்கு பதிவு செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு பதிவு செய்த பின்னர் நான், எனது மேல் அதிகாரிகளிடமோ அல்லது காவல்துறையினரிடமோ மனுதாரரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்று மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். ஆனால் நான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மதுரை–ஆண்டிப்பட்டி ரோட்டில், சுப்புலாபுரம் விலக்கு அருகில் தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். மேற்படி சாலை இருவழிப்பாதை என்றால் சரிதான். பொதுவாக மதுரை–ஆண்டிப்பட்டி செல்லும் வாகனங்கள் வேகமாகத்தான் செல்லும் என்றால் மதுரை நோக்கி செல்லும் வாகனங்கள் மெதுவாக செல்லும். என்னிடம் காட்டப்படும ம.சா.ஆ.19–ன் படி விபத்து நடந்தது மதுரை–ஆண்டிபட்டி மெயின் ரோடிலிருந்து சுப்புலாபுரம் விலக்கில் திரும்பும் இடத்தில் சென்ற பிறகு என் வாகனம் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் டாட்டா ஏசி வாகனத்தை இடித்து விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது கவன்குறைவால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றும்,

இறந்தவருக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்பதற்காக எனது நிர்வாகம் கேட்டதன்பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.